18.02.2026

OS No: 559/2019

வா.சா.1 - கார்த்திகேயன் த/பெ.சேகர்

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. எனது தந்தை சேகர் தான் சாம்பவிகா பள்ளிக்கூடத்தை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். மேற்படி பள்ளிக்கூடத்தின் ஆரம்ப காலம் முதல் தற்போது வரை உள்ள விவரங்கள் எனது அப்பாவிற்கு முழுமையாக தெரியுமா என்றால் தெரியும். சாம்பவிகா பள்ளிக்கூடம் மற்றும் அறக்கட்டளை தொடங்கி போது எனது அப்பா, அம்மா அதில் உறுப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி காசி சம்பவிகா பள்ளிக்கூடத்தில் தலைமை ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர் என்றால் அவர் பட்டதாரி ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர் என்ற விவரம் தெரியும், தலைமை ஆசிரியராக இருந்தாரா என்ற விவரம் தெரியாது. சாம்பவிகா அறக்கட்டளை ஆரம்பிப்பதற்கு முன்பாக அதில் உறுப்பினராக இருந்த முத்துக்கண்ணன், சரவணன், கணேசன், பாலமுருகன், மலர்வேணியின் கணவர் சுரேஷ்குமார் ஆகியோர் KR மேல்நிலைப்பள்ளியின் ஆசிரியர்களாக பணிபுரிந்தார்கள் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி காசியின் மகன் மாறனும் KR மேல்நிலைபள்ளியின் ஆசிரியர் என்றும், மேற்படி மாறனின் நண்பர்கள் தான் மேற்சொன்ன நபர்கள் என்றால் எனக்கு தெரியாது. மாறன் மற்றும் அவரது நண்பர்களான முத்துக்கண்ணன், சரவணன், கணேசன், பாலமுருகன், மலர்வேணியின் கணவர் சுரேஷ்குமார் ஆகியோர் KR மேல்நிலைப்பள்ளியில் உள்ள ஆசிரியர் பணியிலிருந்து விலகி தங்களது சொந்த பணத்தை கொண்டு சாம்பவிகா பள்ளியை உருவாக்கினார்கள் என்றால் சரியல்ல. சாம்பவிகா பள்ளி அமைந்து இருக்கும் இடமானது காசிக்கு சொந்தமான இடம் என்றும், மேற்படி காசி அந்த இடத்தை சாம்பவிகா அறக்கட்டளைக்கு கொடுத்தார் என்றால் பள்ளி அமைந்துள்ள இடம் அறக்கட்டளைக்கு பாத்தியப்பட்ட இடம் என்ற விவரம் எனக்கு தெரியும். மேற்படி காசியிடம் இருந்து பெறப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி அறக்கட்டளையின் உறுப்பினர்கள் கல்வித்துறையில் பணிபுரிந்து அனுபவம்

பெற்ற நபர்கள் அதனடிப்படையில் மேற்படி பள்ளிக்கூடத்தை உருவாக்கினார்கள் என்றால் இருக்கலாம். மேற்படி பள்ளிக்கூடத்தில் முத்துக்கண்ணன் தலைமை ஆசிரியராகவும், மாறன் உதவி தலைமை ஆசிரியராகவும் இருந்தார்கள் என்றால் தெரியாது. 2000 முதல் 2012 வரை மேற்படி சாம்பவிகா பள்ளிக்கூடம் மற்றும் அறக்கட்டளையை காசி மற்றும் அறக்கட்டளை உறுப்பினர்கள் தான் நிர்வகித்து வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி அறக்கட்டளை மற்றும் சாம்பவிகா பள்ளிக்கூடம் ஆரம்பித்த காலக்கட்டமான 2000 வருடத்தில் எனது அப்பா, அம்மா அதற்கு தங்களது பங்கு தொகை எதுவும் கொடுத்தார்களா என்றால் அப்போது எனக்கு வயது 8 ஆகும். எனது அம்மா காசியின் மகள் ஆவார். காசி எங்களது வீட்டில் தான் இருந்தார். அதனால் எனது அம்மா, அப்பா பங்கு தொகையை கொடுத்திருக்கலாம். காசி எங்கள் குடும்பத்துடன் இல்லை என்றும், அவரது மகனான மாறன் என்பவருடன் தான் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. காசிக்கு எனது அம்மா மற்றும் மாறன் ஆகியோர் தவிர கருணாநிதி, பாரதிதாசன் ஆகியோர் மகன்கள் என்றால் சரிதான். 2006ம் வருடத்திற்கு முன்பு என் அப்பா என்ன தொழில் செய்து வந்தார் என்றால் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார், வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தார். 2000ம் வருடத்தில் ஆரம்பித்த காலத்தில் 2ம் பிரதிவாதி பாலமுருகன் அறக்கட்டளையின் தலைவராக இருந்தார் என்றால் ஞாபகம் இல்லை. 2000ம் ஆண்டு முதல் 2006ம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் அறக்கட்டளையின் தலைவர், செயலாளர், பொருளாளர் போன்றர் அறக்கட்டளையின் விதிமுறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்கள் என்றால் ஞாபகமில்லை. 2006ம் வருடம் மேற்படி அறக்கட்டளையின் தலைவர் மற்றும் செயலாளராக காசி பொறுப்பேற்று நடத்தி வந்தார் என்றால் அறக்கட்டளையின் உறுப்பினர்கள் நடத்தி வந்தனர். முத்துக்கண்ணன், கணேசன், சரவணன் ஆகியோர் 2006ம் வருடத்திற்கு முன்பு அறக்கட்டளையின் வருவாயை முறைகேடாக பயன்படுத்திக்கொண்டார்கள் என் பிராதில் குறிப்பிடும் சங்கதி குறித்து காவல்

துறையிலோ நீதிமன்றத்திலோ புகார் ஏதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் தெரியாது. முத்துக்கண்ணன், கணேசன், சரவணன் ஆகியோர் 31.05.2006ம் தேதியிட்ட அறக்கட்டளை திருத்தல் பத்திரத்தில் தங்களது சொந்த வேலையின் காரணமாக சாம்பவிகா கல்வி அறக்கட்டளையில் இருந்து விலக தீர்மானித்ததாக சங்கதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் பிராதில் குறிப்பிட்டது போன்று அறக்கட்டளையின் வருவாயை முறைக்கேடாக பயன்படுத்தியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. முத்துக்கண்ணன் என்பவர் சாம்பவிகா கல்வி அறக்கட்டளையில் இருந்து விலகி சிவகங்கை சோழபுரத்தில் ரமணவிலாஸ் என்ற பள்ளி தொடங்கி நடத்தி வருகிறார் என்றால் முத்துக்கண்ணன் மட்டும் மேற்படி பள்ளியை நடத்தி வருகிறாரா என்று தெரியாது, நிறைய நபர்கள் சேர்ந்து மேற்படி பள்ளியை நடத்தி வருகிறார்கள் என்று கேள்விப்பட்டுள்ளேன். சரவணன் என்பவர் அரசு பள்ளியில் வேலை கிடைத்து சென்றுவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. முத்துக்கண்ணன், கணேசன், சரவணன் ஆகிய மூவரும் விலகி பின்பு அவர்களுக்கு பதிலாக சேகர், ராணி, பாரதிதாசன் ஆகியோர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டார்கள் என்றால் சரிதான். முத்துக்கண்ணன், கணேசன், சரவணன் ஆகிய மூவரும்அறக்கட்டளையில் இருந்து விலகிய சமயத்தில் அறக்கட்டளையில் சார்பாக வெகுமானம் கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது கொடுக்கப்பட்டிருக்கலாம். மேற்படி வெகுமானம் கொடுக்கப்பட்டதா இல்லையா என்ற ஆவணங்கள் எங்களது பள்ளியில் இருக்கும் என்றால் எனக்கு தெரிந்து இல்லை. எனது அப்பா, அம்மா சாம்பவிகா பள்ளியிலும் அறக்கட்டளையிலும் உறுப்பினராக சேர்வதற்கு நிதி எதுவும் கொடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது கொடுக்கப்பட்டிருக்கலாம். எனது அப்பா, அம்மா சாம்பவிகா பள்ளியிலும் அறக்கட்டளையிலும் உறுப்பினராக சேர்வதற்கு நிதி எதுவும் கொடுத்ததாக என்னிடம் சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. 2, 3 பிரதிவாதிகள் எங்களது உறவினர்கள் அல்ல வெளி நபர்கள் என்றால் சரிதான். எனது அப்பா, அம்மா மற்றும் பாரதிதாசன்

ஆகியோர் அறக்கட்டளையில் உறுப்பினராக சேர்வதற்கு அறக்கட்டளையில் தீர்மானம் நிறைவேற்றி தான் சேர்க்கப்பட்டார்கள் என்றால் அறக்கட்டளை by law படி சேர்க்கப்பட்டார்கள். மேற்படி எனது அப்பா, அம்மா மற்றும் பாரதிதாசன் ஆகியோர் அறக்கட்டளையின் புதிதாக சேர்ந்த போது அறக்கட்டளை திருத்தல் பத்திரத்தில் மேற்படி மூவரும் மற்றும் மற்ற 3 உறுப்பினர்களும் சேர்ந்து திருத்தல் பத்திரத்தில் கையெழுத்து செய்து பதிவு செய்யப்பட்டதா என்றால் by law படி சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அறக்கட்டளையின் by law -வை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். மேற்படி அறக்கட்டளை by law-வின் உறுப்பினரை நீக்குவதும், சேர்ப்பதும் எந்த விதியில் உள்ளது என்றால் by law-வில் உள்ளது மேற்படி by law வை பார்க்கும் பட்சத்தில் எந்த விதி என சொல்ல முடியும். by lawவில் அறக்கட்டளையில் மொத்தம் அதிக பட்சமாக எத்தனை உறுப்பினர்கள் இருக்கலாம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் by law வை பார்த்தால் சொல்ல முடியும். புதிதாக ஒரு உறுப்பினரை சேர்க்க வேண்டும் என்றால் ஏற்கனவே உள்ள உறுப்பினர்கள் ஒன்று கூடி தீர்மானம் நிறைவேற்றினால் தான் சேர்க்க முடியும் என அறக்கட்டளை by lawவில் விதி உள்ளது என்றால் by lawவை பார்த்தால் சொல்ல முடியும். 2006 முதல் 2012 காலக்கட்டத்தில் அறக்கட்டளையின் உறுப்பினராக இருந்த எனது அப்பா, அம்மா என்ன அன்றாட பணிகளை பார்த்து வந்தார்கள் என்றால் எனது அப்பா வெளிநாட்டில் இருந்தார். அன்றாட பணிகளை மாதம் ஒரு முறை பார்த்து வந்தார். எனது அம்மா House Wife என்பதால் பள்ளிக்கோ, அறக்கட்டளைக்கோ செல்வது இல்லை என்றால் அன்றாடம் செல்வது இல்லை, மாதத்திற்கு ஒரு முறை செல்வார். by law படி 2 மாதத்திற்கு ஒரு முறை அறக்கட்டளை கூட்டம் கூட்ட வேண்டுமென விதிமுறை உள்ளதா என்றால் அறக்கட்டளை கூட்டம் கூட்ட வேண்டும் என்ற விதிமுறை உள்ளது 2 மாதத்திற்கு ஒரு முறையான என்ற விவரம் தெரியாது. 2 மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்படும் அறக்கட்டளை கூட்டத்தில் எனது அப்பா அம்மா கலந்து

கொண்டார்களா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அறக்கட்டளை கூட்டத்தில் கலந்து கொண்டார்கள் என தெரியும் 2 மாதத்திற்கு 1 முறையா என தெரியாது. அறக்கட்டளையில் புதிதாக ஒருவரை உறுப்பினராக சேர்க்க அறக்கட்டளை உறுப்பினர்களில் எத்தனை பேர் சம்மதம் வேண்டும் என அறக்கட்டளை by law வில் உள்ள விவரம் தெரியுமா என்றால் by law வை பார்த்தால் தான் சொல்ல முடியும். அறக்கட்டளை by law படி ஒரு குடும்பத்தை சேர்ந்த இருவர் ஒரே நேரத்தில் அறக்கட்டளையின் உறுப்பினராக இருக்க முடியுமா என்றால் இருக்க முடியும். எனது அப்பா சாம்பவிகா பள்ளிக்கூடத்தில் நிர்வாக பொறுப்பை 2012ம் வருடம் எடுத்து கொண்ட போது காசி, சேகர், ராணி, பாலமுருகன், மலர்வேணி, பாரதிதாசன் ஆகிய 6 நபர்கள் அறக்கட்டளையின் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்றால் சரிதான். சாம்பவிகா கல்வி அறக்கட்டளையில் அதிக பட்சம் 6 நபர்கள் உறுப்பினர்களாக இருக்கலாம் என By law வில் உள்ளது என்றால் சரிதான். பாரதிதாசன் அறக்கட்டளையில் இருந்து விலகி கொள்வதாக கடிதம் கொடுத்துள்ளார் என்றும் அது குறித்து அறக்கட்டளை திருத்தல் பத்திரம் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் கடிதம் கொடுத்தார், திருத்தல் பத்திரம் பதிவு செய்யப்படவில்லை. 2012ம் வருடத்திற்கு முன்பு உள்ள 2009, 2010, 2011 மற்றும் 2012 நிதி ஆண்டுகளில் அறக்கட்டளையின் தலைவர், செயலாளர், பொருளாளர் யார் என்றால் உறுப்பினர்கள் இருந்தார்கள் குறிப்பாக யார் என்று தெரியாது. 2012ம் வருடத்திற்கு பின்பு உள்ள 2013, 2014, 2015 மற்றும் 2016 நிதி ஆண்டுகளில் அறக்கட்டளையின் தலைவர், செயலாளர், பொருளாளர் யார் என்றால் எனது அப்பா சேகர் தலைவராக இருந்தார், செயலாளர், பொருளாளர் யார் என்று தெரியவில்லை. எனது அப்பா தலைவராக தேர்ந்தெடுத்திட நடத்தப்பட்ட அறக்கட்டளை கூட்ட தீர்மானம் குறித்த ஆவணங்களை தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். 2012ம் வருடத்திற்கு பிறகு அறக்கட்டளையின் உறுப்பினரான காசி, மலர்வேணி, பாலமுருகன் ஆகியோர் சம்மதமின்றி எனது அப்பா

மற்றும் அம்மா ஆகியோர் தன்னிச்சையாக தலைவர், செயலாளராக இருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. பாரதிதாசன் அவர்கள் அறக்கட்டளையின் உறுப்பினர் பதவியில் இருந்து விலகிய பின்பு அறக்கட்டளையின் அதிகபட்ச உறுப்பினர்களான 5 நபர்களில் பெரும்பான்மையோர் ஆதரவின்றி காவல் துறை உதவியுடன் அறக்கட்டளையின் தலைவர், செயலாளராக எனது அப்பா, அம்மா பொறுப்பை எடுத்துக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. ஸ்கூல் கமிட்டிக்கு பள்ளிக் கல்வி துறையிடம் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்றால் பெறப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி குறித்த ஆவணம் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறோம். அறக்கட்டளை By law வில் பள்ளிக் கட்டணமானது குறிப்பிட்ட வங்கி பெயர் சொல்லி அதன் கணக்கில் தான் வைத்து வரப்பட வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பள்ளிக் கட்டணம் தற்போது எந்த வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் ஐசிஐசிஐ வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. பணப்பரிமாற்றம் சம்மந்தமான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் என்றால் வேண்டும் என்றால் தாக்கல் செய்கிறேன். அறக்கட்டளையில் நான் உறுப்பினராக By law வின் எந்த விதியின் படி சேர்க்கப்பட்டேன் என்றால் By law படி சேர்க்கப்பட்டேன் எந்த விதி என்று தெரியாது. பார்த்தால் சொல்லலாம். என்னை அறக்கட்டளையின் உறுப்பினராக சேர்க்க அறக்கட்டளை கூட்டம் நடத்தப்பட்டதா என்றால் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டம் எந்த தேதியில் நடத்தப்பட்டது அதில் யார் கலந்து கொண்டார்கள் என்றால் தேதி ஞாபகமில்லை, எனது அப்பா, அம்மா இருந்தார்கள் மற்ற நபர்கள் உறுப்பினர்கள் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்கள். மற்ற உறுப்பினர்களை யார் நீக்கியது, எப்போது நீக்கப்பட்டார்கள் என்றால் அறக்கட்டளையின் உறுப்பினர்கள் நீக்கினார்கள், என்னை சேர்ப்பதற்கு முன்பு நீக்கினார்கள், தேதி தெரியாது. அறக்கட்டளையின் உறுப்பினர்கள் நீக்கியது குறித்து அறக்கட்டளை கூட்டம் கூட்டப்பட்டதா என்றால் கூட்டம் கூட்டப்பட்டது குறித்து தெரியாது by law படி நீக்கினார்கள். அறக்கட்டளையின் by law

வில் பெரும்பான்மை உறுப்பினர்களை சிறுபான்மை உறுப்பினர்கள் நீக்கலாம் என எந்த விதியில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அறக்கட்டளை விதி முறைகளுக்கு முரணாக நடந்து கொண்டால் நீக்கலாம் என விதி முறை உள்ளது எந்த விதி என By law வை பார்த்தால் சொல்ல முடியும். பெரும்பான்மை உறுப்பினர்களை சிறுபான்மை உறுப்பினர்கள் நீக்கலாம் என விதி முறையில் உள்ளதா என்றால் அவ்வாறு இல்லை. எனது தந்தைக்கு எதிராக காசி கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு சிவகங்கை நீதித்துறை நடுவர் எண். 2ல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் முதல் தகவல் அறிக்கையின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கு Mistake of fact என முடித்து வைக்கப்பட்டதாக தனிநபர் தாக்கல் செய்த புகாரின் பெயரில் வழக்கு நிலுவையில் உள்ளது. மேற்படி குற்ற வழக்கில் எனது தந்தைக்கு முன் ஜாமின் கிடைத்திடாமல் அவர் தலைமறைவாக இருந்த தேதியில் என்னை அறக்கட்டளையின் உறுப்பினராக சேர்த்தார்கள் என்றால் சரியல்ல. காசி, மலர்வேணி, பாலமுருகன் ஆகிய மூவர் ஒப்புதலின்றி என்னை அறக்கட்டளையின் உறுப்பினராக சேர்க்க இயலாது என்றால் சரியல்ல. மேற்படி காசி, மலர்வேணி, பாலமுருகன் ஆகிய மூவரை அறக்கட்டளையில் இருந்து நீக்கம் செய்திட அறக்கட்டளை திருத்தல் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அறக்கட்டளையின் பதிவு பத்திரத்தின் அடிப்படையில் 6 நபர்கள் ஏற்கனவே உறுப்பினராக இருக்கும் சூழ்நிலையில் 7 வதாக என்னை உறுப்பினராக சேர்க்க இயலாது என்றால் சரியல்ல. என்னை 7வது நபராக அறக்கட்டளையின் உறுப்பினராக சேர்த்தது குறித்து மாவட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு கொடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்றதா என்றால் மேற்படி மனுவின் பெயரிலான விசாரணை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டதற்கான காரணம் தெரியுமா என்றால் காரணம் தெரியவில்லை, அதன் பெயரில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். பள்ளிக் கல்வி கட்டணத்திற்கு ரசீது கொடுக்கும் நடைமுறை உள்ளதா என்றால்

உள்ளது. எங்களது பள்ளியில் மாணவர்களிடம் பள்ளிக் கட்டணம் நேரில் ரொக்கமாகவும் வங்கி மூலமாகவும் பெறப்படும் என்றால் சரிதான். பள்ளிக் கட்டணம் Term fee யாக வசூலிக்கப்படுமா அல்லது வருடத்திற்கு ஒரு முறை வசூலிக்கப்படுமா என்றால் Term fee யாக வசூலிக்கப்படும். தமிழக அரசு தனியார் பள்ளிக் கட்டண குழுவானது எங்களது பள்ளிக்கு கட்டணம் நிர்ணயித்துள்ளது என்றால் சரிதான். மேற்படி பள்ளிக் கட்டணம் குறித்து அறிவிப்பு தாக்கல் செய்ய இயலுமா என்றால் முடியும். பள்ளிக்கட்டண குழு நிர்ணயித்த கல்வி கட்டணத்தை தான் வசூல் செய்கிறோமா இல்லையா என்றால் பள்ளிக்கட்டண குழு நிர்ணயித்த கல்வி கட்டணத்தை தான் வசூல் செய்கிறோம். பள்ளிக்கட்டண குழு நிர்ணயித்த கல்வி கட்டணத்திற்கு மட்டும் ரசீது கொடுத்தும் கூடுதலான தொகையை நேரடியாக வசூல் செய்கிறோம் என்றால் சரியல்ல. மேற்படி ஒவ்வொரு வகுப்புகளுக்குமான பள்ளிக்கட்டணம், பேருந்து கட்டணம் போன்ற கட்டண விவரம் குறித்த ஆவணத்தை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். ஒவ்வொரு வருட பள்ளிக் கட்டண வரவு செலவு அறக்கட்டளைக்கு முன்பாக வைத்து கணக்கு கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் வருமான வரி தாக்கல் செய்துள்ளோம். 21.11.2017ம் தேதி வருமான வரி ஆய்வுக்காக வந்தவர்கள் எனது அப்பா, அம்மாவை மட்டும் விசாரித்தார்கள் மற்ற அறக்கட்டளை உறுப்பினர்களை விசாரிக்கவில்லை என்றால் காசி என்பவர் கொடுத்த புகாரின் பேரில் பள்ளிக்கூடத்திற்கு வந்தார்கள் அங்கு ஆய்வு செய்து பள்ளி அலுவலர்களிடம் விசாரித்தார்கள். வருமான வரி அலுவலகத்தில் எங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. தாவா வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்த சமயத்தில் நீதிமன்றத்திற்கு தெரிவிக்காமல் என்னை அறக்கட்டளையில் உறுப்பினராக சேர்த்தார்கள் என்றால் தாவா வழக்கு நிலுவையில் இருக்கும் போது உறுப்பினராக சேர்த்தார்கள். தாவா வழக்கில் நான் ஒரு தரப்பினராக 2023ம் வருடம் தான் சேர்க்கப்பட்டேன் என்றால் சரிதான். OS No. 68/2013 வழக்கை காசி என்பவர் எங்களுக்கு எதிராக 2012க்கு பிறகுள்ள அறக்கட்டளையின்

வரவு செலவு குறித்தும் இன்னும் சில பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் தாவா வழக்கை நாங்கள் 2000 முதல் 2012 வரையிலான காலத்திற்கு அறக்கட்டளையின் வரவு செலவு குறித்து தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் நாங்கள் காசியிடம் கணக்கு கேட்டதால் தான் மேற்படி வழக்கையே தாக்கல் செய்தார். காசியிடம் கணக்கு கேட்டதாக நாங்கள் சொல்வது பொய் என்றும் வருடத்திற்கு 8 கோடிக்கு மேல் பள்ளியின் வருவாயை நாங்கள் பெற்று வருகிறோம் என்றால் சரியல்ல. சாம்பவிகா பள்ளியில் முதலில் 3000 மாணவர்கள் படித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. 2000 மாணவர்கள் இருப்பார்கள். 2012ற்கு பிறகு 2400 மாணவர்கள் இருந்தார்கள். காசி என்பவரால் பள்ளிக் கூடத்திற்கான கட்டிடங்கள் கட்டப்பட்டது என்றும், போக்குவரத்திற்கான வாகனங்கள் வாங்கப்பட்டது என்றும், அதனை நாங்கள் பராமரித்து வருகிறோம் என்றால் சரியல்ல. காசி அவர்கள் 5 வேன்கள் மட்டுமே வாங்கி வைத்து இருந்தார், அப்போது அடிப்படை வசதி இல்லாமல் இருந்தது, தற்போது அடிப்படை வசதிகளை பெருக்கிதால் மாணவர்களும் அதிகம் பேர் உள்ளனர். வாகனங்களும் நிறைய உள்ளது. பள்ளி ஆரம்பித்த போது சிவகங்கையிலுள்ள சிறந்த ஆசிரியர்கள் சாம்பவிகா பள்ளியில் இருந்ததால் மாணவர்கள் அதிகமாக படித்தார்கள் என்றும் எனது தந்தை கல்வியாளர் இல்லை என்றால் சரியல்ல. எனது அப்பா சிவகங்கையில் காந்தி வீதியில் வீட்டு உபயோக பொருள் விற்பனை செய்யும் கடை வைத்திருந்தார் என்றால் 1985 முதல் 1995ம் வருட காலக்கட்டத்தில் வைத்திருந்தார். நான் தாக்கல் செய்துள்ள வருமான வரி ஆவணங்கள் அனைத்தும் எங்களது ஆடிடர் மூலமாக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் என்றும் அதில் வருமான வரி முத்திரை எதுவும் இல்லை என்றால் ஆடிடர் மூலமாக வருமான வரி அலுவலகத்திற்கு நாங்கள் தாக்கல் செய்த ஆவணம் தான் மேற்படி ஆவணங்கள். எங்களுக்கு சாதகமான கணக்கு பட்டியலை தாக்கல் செய்துள்ளோம் என்றும், உண்மையான வருமானத்தை மறைத்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா

பரிகாரம் கால வரம்பு தோசத்தால் தடை செய்யப்பட்டுள்ளது என்றும் தாவா பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா வழக்கில் உண்மையான விவரம் எனது தந்தைக்கு தான் தெரியும் என்றால் உண்மை விவரங்களை மறைத்திட என்னை சாட்சியமளிக்க செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** :இல்லை.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2026.02.18 17:20:03 +0530